"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"



# இளந்தீபம்

இந்து இளைஞர் மன்றம், மூளாய் ★ YOUNGMEN HINDU ASSOCIATION, MOOLAI ★

சைவநீதி விளங்குக மேன்மை கொள் உலகமெலாம்

ஸ்தாபிதம் 22-12-1943

இந்து இளைஞர் மன்றம்

மூளாய்.

# பொன்விழா சிறப்புமலர்

29-01-1994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# இந்து இளைஞர் மன்றம்
மூளாய்.

ஸ்தாபிதம்: 22-12-1943 ஐம்பதாண்டு நிறைவு: 22-12-1993

## கடவுள் வணக்கம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து.

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தினுள்ளே
யிருப்பளிங்கு வாராதிடர்.

வான்முகில் வளாதுபெய்க மலிவளம்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

மூளாய் இந்து இளைஞர் மன்றத்தின் பொன்விழா நிகழ்விலே மன்றத்தின் வரலாற்று நிர்வாக நினைவலைகளையும், ஆசிச் செய்திகளையும், வாழ்த்துக்களையும் தாங்கி இச்சிறப்புமலரை வெளியிடுவதில் நாம் பெருமையடைகிறோம். 22-12-1943 இல் ''சைவ இளைஞர் சங்கம்'' என்ற பெயருடன் ஆரம்பிக்கப்பட்டு, பின்னர் இந்து இளைஞர் பேரவையின் ஆலோசனைக்கிணங்க ''இந்து இளைஞர் மன்றம்'' எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்ட எமது மன்றத்தின் பொன்விழாவை, பொன் விழா ஆண்டாகிய கடந்த ஆண்டின் இறுதி நாட்களிலேயே கொண்டாடுவதற்கு திட்டமிட்ட போதிலும் கடும் மழையினாலும், போர்க்காலச் சூழ்நிலையாலும் குறித்த ஐம்பதாண்டு நிறைவு நாளில் எமக்கு விழாவை நடாத்த முடியாதநிலை ஏற்பட்டது. எனவே ஓர் மாதம் தாமதமாகவே பொன்விழாவை ஏற்பாடு செய்யவேண்டிய சூழ்நிலை எமக்கு ஏற்பட்ட போதிலும், இவ்வூர் மக்களினது, அயலூர் மக்களினது, மன்ற கௌரவ அங்கத்தவர்களினதும், அபிமானிகளினதும் ஒத்துழைப்பினால் இயன்றவரை சிறப்பாக இப் பொன்விழாவை நடாத்துவதில் பெருமகிழ்வடைகிறோம்.

இந்து இளைஞர் மன்றத்தின் ஐம்பதாண்டு கால வளர்ச்சிப் பாதையின் முழு விவரங்களையும் வரலாற்று நிர்வாக நினைவாக நினைவலைகளாக வெளியிட முடியாவிட்டாலும், இயன்றவரை சுருக்கமாக விபரித்துள்ளோம். மன்றத்தில் உள்ள ஆவணங்களில் கிடைத்த தகவல்களுடனும், கௌரவ அங்கத்தவர்களின் ஒத்துழைப்புடனும் மன்ற வரலாற்றினை முழுமையாக விபரிக்கவும், வெளியிடவும் எண்ணிய போதிலும், சில தசாப்தங்களில் நிகழ்ச்சிகளை தொடர்ச்சியாக தொகுக்க முடியாததால், சில காலங்களை மட்டும் முழுமையாக வெளிப்படுத்தல் தவறானதாகையால், மிகச் சுருக்கமாக வெளியிட வேண்டிய நிலை ஏற்பட்டதில் வேதனையடைகிறோம். இச் சிறப்புமலரில் காணப்படும் குறைகள் பொறுப்பதுடன், எதிர்காலத்திலும் மன்ற வளர்ச்சிக்கு உதவவும் வேண்டுகிறோம்.

மூளாயின் இரு கண்களாக விளங்கி என்றும் நல்லருள் சுரக்கும் வதிரன்புலோ ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமானுக்கும், ஸ்ரீ முத்துக்குமார சுவாமிக்கும் இம்மலரை சமர்ப்பணம் செய்கிறோம்.

29-01-1994 மன்றநிர்வாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர்

# ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்

# வழங்கிய ஆசியுரை

அருட்பெருந்தகையீர்,

மூளாய் இந்து இளைஞர் மன்றம் பொன்விழா எடுக்கவிருப்பதறிந்து பெருமகிழ்ச்சியடைகின்றோம். இம் மன்ற அன்பர்கள் சுயநலமிலாப் பொதுநல சேவை புரிந்த ஒரு சாதனை பாராட்டுக்குரியது. இதனை இட்டு ஒரு மலர் வெளியிடுவதும் சாலப்பொருத்தமாகும் இன்னல்களும். இடர்களும் நிறைந்த இக் காலகட்டத்திலே இளைஞர்கள் உள்ளங்களிலே இத்தகைய சைவசமயப் பற்றும் விடாமுயற்சியும் கிளர்ந்தெழுவது இறைவன் திருவருளே அன்றி வேறில்லை. இவ்விழா செவ்வனே நிறைவுற இறைவன் திருவருளை உளமாரவேண்டி இதில் இணையும் அன்பர்கள் எல்லோருக்கும் எமது நல்லாசிகளை வழங்குகின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அறிவு''

ஒப்பம்

(ஸ்ரீலஸ்ரீ குருமஹா சன்நிதானம்)

திருஞான சம்பந்தர் ஆதீனம்

25-01-1994. நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''துர்க்கா துரந்தரி'' செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

# வழங்கிய வாழ்த்துரை

''மூளாய் இந்து இளைஞர் மன்றம் பொன்விழா காண்கிறது''

இளைஞர்கள் வளர்ச்சியில் சமயம் வழங்கும் கொடை மகத்தானது சமயம் என்பது உள்ளத்தை உறுதியாக வளரச் செய்வது. குறிக்கோளோடு வாழவழி காட்டுவதும் இதுவே. எனவே இளைஞர்கள் மன்றம் அமைத்து சமயப் பாதையை அரண் செய்வதும், தொண்டு மனப்பான்மையை வளர்ப்பதும் இன்றியமையாததாகும்.

மூளாய் இந்து இளைஞர் மன்றம் ஆற்றிவரும் சேவையை நான் நன்கு அறிவேன் இருபத்தைத்து ஆண்டுகளுக்கு முன்பு வெள்ளிவிழா விலே முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட பாக்கியம் எனக்குக் கிடைத்தது.

''தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணி செய்து கிடப்பதே''

என்ற அருள் வாக்குப்படி தமது கடமைகளை நிறைவேற்றி வருபவர் கள் இவர்கள். மக்கள் கடமையையும் மகேசன் கடமையையும் ஒன்றாக மதிப்பவர்கள் இதனாலேயே இன்று பொன்விழாக்காணும் பேற்றினை இச்சங்கம் எய்தியுள்ளது. துன்பங்களும் துயரங்களும், தொல்லைகளும் துரத்திய போதிலும் கடமையுணர்வையும், கடவுள் நம்பிக்கையும் கைவிடாது மேற்கொண்டு வரும் மூளாய் இந்து இளை ஞர் மன்றத்தை மனமார வாழ்த்தி மேலும், மேலும் நற்பணியாற்றி ஏற்றமடைய வேண்டுமென்று திருவருளைப் பிரார்த்தித்து அமை கின்றேன்.

ஒப்பம்
**(தங்கம்மா அப்பாக்குட்டி)**
தலைவர்
துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.

25-01-1994.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிவநெறிச் செல்வர்"
கலாநிதி. க. கனகராசா J. P., D. MSc, Ditt
அவர்கள்

# மனமுவந்து அளித்த வாழ்த்துரை

"பல்லாண்டு பல்லாண்டு பணிபல ஆற்றுக"

மூளாய் இந்து இளைஞர் மன்றம் ஐம்பது ஆண்டுகள் நற்பணிகள் பல ஆற்றி வைரவிழாக்காண விரைவது பெருமகிழ்ச்சி. இவ்விளைஞர் மன்றத்தின் வளர்ச்சியின் ஒவ்வொரு பராயத்திலும் அதனுடன் ஈடுபாடு கொள்ளும் பாக்கியம் மில்க்வைற் நிறுவனத்திற்கும் கிடைத்து வந்துள்ளது.

இந்து என்றோ இளைஞர் என்றோ மதிற் சுவர்களை எழுப்பாமல் தொண்டென்னும் பாலத்தால் அனைவரையும், அரவணைத்து விரித்து பரந்த அளவில் சிந்தித்தும் செயலாற்றியும் வரும் மூளாய் இந்து இளைஞர் மன்றம் பல்லாண்டு, பல்லாண்டு பணிபல ஆற்றிட வாழ்த்துகிறோம்.

ஒப்பம்

(க. கனகராசா)
சமாதான நீதவான்
உரிமையாளர்:
மில்க்வைற் சவர்க்கார தொழிலகம்
யாழ்ப்பாணம்.

24-01-1994.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலதிக அரசாங்க அதிபரும், பிரதேச செயலரும்
(சண்டிலிப்பாய்) ஆகிய

## திரு. து. வைத்திலிங்கம் அவர்கள்

## வழங்கிய ஆசிச் செய்தி

மூளாய் இந்து இளைஞர் மன்றம் தனது பொன் விழாவைக் கொண்டாடும் இத்தருணத்தில், மன்றத்தால் வெளியிடப்படும் மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். 1943இல் ஆர்வமிக்க இளைஞர்களால் சைவ இளைஞர் சங்கம் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட அமைப்பே. பின்பு இந்து இளைஞர் மன்றமாக மாறியது. இந்து சமய அபிமானிகளாகிய இம் மன்றத்தினர் மூளாயில் பல்வேறு சமயப் பணிகளிலும், சமூகப் பணிகளிலும் தம்மை ஈடுபடுத்தி மூளாய்ப் பகுதி மக்களின் அபிமானத்தையும் பெற்றவர்கள். இவர்களது பணி மிகவும் சிரமமானது நான் சங்கானையில் உதவி அரச அதிபராய் கடமையாற்றிய சமயம் இவர்களது நற்பணிகளை நன்கு அறியக்கூடியதாக இருந்தது மேன்மேலும் இம்மன்றத்தினர் சமய, சமூகப்பணிகள் புரிந்து நீடூழி வாழ என் ஆசிகளும், வாழ்த்துகளும் உரித்தாகுக.

ஒப்பம்
(து. வைத்திலிங்கம்)
பிரதேச செயலகம்
சண்டிலிப்பாய்,

25-01-1994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கானை பிரதேச செயலர்

திரு. கா. சந்திரராசா அவர்கள்

## வழங்கிய ஆசியுரை

மூளாய் இந்து இளைஞர் மன்றம் தனது பொன்விழாவினைக் கொண்டாடும் இச் சந்தர்ப்பத்தில் அம்மன்றத்தினரால் வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு எனது ஆசியுரையை வழங்குவதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். கடந்த ஐம்பது வருட காலமாக இம் மன்றம் பலசேவைகளைப் புரிந்து இந்தப் பகுதியில் அரும்பணி ஆற்றி வருகிறது.

ஆரம்பத்தில் மூளாய் சைவ இளைஞர் சங்கம் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட இச் சங்கம், பின்னர் மூளாய் இந்து இளைஞர் மன்றம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இம் மன்றத்தின் கடந்தகால நிர்வாகிகளின் அயரா உழைப்பின் பயனாகவும். நல்லோரினால் இடப்பட்ட நல்ல அத்திவாரத்தின் பயனாகவும், உறுதியுடன் பணியாற்றி வருகிறது.

இம் மன்றம் நூலக சேவை, விளையாட்டுத்துறை அபிவிருத்தி, சமய வளர்ச்சிப்பணி போன்ற பல பணிகளை ஆற்றி வருவது பாராட்டுக்குரியதாகும். இம்மன்றத்தை வழிநடத்திவரும் தற்போதைய நிர்வாகிகளின் பணி மிகவும் சிறப்பு வாய்ந்ததாக இருப்பதுடன் போற்றப்படக் கூடியதாகவும் உள்ளது. மன்றம் மேன்மேலும் வளர்ந்து பெரும் பணி ஆற்ற வேண்டும் என எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒப்பம்

(கா. சந்திரராசா)

பிரதேசசெயலகம்

25-01-1994 சங்கானை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதிரன்புலோ தேவஸ்தான ஸ்ரீ சித்தி விநாயகர் அர்ச்சகர்,

பிரம்மஸ்ரீ சி. ஜெயானந்தசர்மா அவர்கள்

# வழங்கிய ஆசியுரை

''வேழ முகத்து விநாயகனைத்-தொழ
வாழ்வு மிகுந்து வரும்''

வட தமிழ் ஈழத்தின் புராதன நகரமாம் மூளாயப்பதி வதிரன் புலோவில் வீற்றிருக்கும் எல்லாம்வல்ல விநாயகப் பெருமானதும் முத்துக்குமாரசாமியினதும் அருட்பார்வையில் பொலிவுற்று திகழ்கின்றது. எங்கள் இந்து இளைஞர் மன்றம் அதனால் தானோ ஐம்பது ஆண்டுகள் கடந்தும் இன்றும் துள்ளும் இளமையுடன் அருட்பணிகளை இம்மன்றம் ஆற்றி வருகின்றது.

எம்மினத்திற்கு தமிழும், சைவமும் இரு கண்களாகும். நம் தமிழையும், சைவத்தையும் தழைத்தோங்கச் செய்ய இம்மன்றம் அன்று தொட்டு ஆற்றி வரும் பணிகள் அளப்பரியன. குறிப்பாக எமது தேவஸ்தானத்தை பொறுத்தவரை இம்மன்றத்தினூடாக, எம்மிளைஞர்கள் பல அரிய, பெரிய நற்பணிகளை ஆற்றி வருகின்றனர். பல ஆண்டுகளாக எமது மகோற்சவ காலத்தில் வெள்ளை அடித்தல், வீதி துப்பரவு செய்தல், கோயிலுடன் தொடர்பான பல சரியை தொண்டுகள், அன்னதானம் போன்ற இன்னோரன்ன தொண்டுகளை இம்மன்றம் புரிந்து வருகின்றது. இவற்றிற்கெல்லாம் மகுடம் வைத்தாற்போல் ஆலய மேற்கு வீதி புதிய மதில் சுவரை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டு அதனைச் செவ்வனே நிறைவேற்றியுள்ளது.

எமது நாட்டில் எத்தனையோ இடர்கள், துன்பங்கள் காலத்திற்குக்காலம் ஏற்பட்டபோதும் இம்மன்றத்தையும, இதன் அங்கத்தவர்களையும் இடர் நீங்கி வாழ வைப்பது. எம்பெருமானிற்கு மன்ற அங்கத்தவர்கள் புரியும் அரும் பெரும் தொண்டுகள் தான் என்றே நான் விடைபகர்வேன்.

இம் மன்றம் தன் அங்கத்தவர் எண்ணிக்கையை மேலும்பெருக்கி அதன் ஒற்றுமையின் பலத்தினால் மேலும் உறுதியாகி தொடர்ந்தும் எம் தேவஸ்தானத்திற்கும், கிராமத்திற்கும் பல அரிய தொண்டுகளை ஆற்றி மேலும் சீரும் சிறப்பும் பெற்று, மணி விழா, வைர விழா, நூற்றாண்டு விழா கண்டு அங்கத்தவர்களும் சிறந்து வாழ்ந்திட எல்லாம் வல்ல சித்தி விநாயகப் பெருமானை இறைஞ்சி எனது நல்லாசிகளை மிக்க மகிழ்வுடன் தெரிவிக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர் தேவஸ்தான பரிபாலனசபையினர்
## வழங்கிய ஆசியுரை

சைவமும், தமிழும், வீரமும் ஒருங்கே வளரும் யாழ் குடா நாட்டில் மேற்குத் திசையில் மருதமும், நெய்தலும் அருகிருப்ப நீர்வளமும், நிலவளமும் சிறந்து விளங்கும் சீர் செறிந்த வலிகாமம் மேற்குப் பகுதியிலுள்ள 'மூளாய்' என்னும் புண்ணிய பூமியில் "இந்து இளைஞர் மன்றம்" இன்று பொன் விழா எடுப்பதில் இக்கிராம மக்களாகிய யாம் பெருமிதமும் பேருவகையும் எய்துகின்றோம்.

ஐம்பது ஆண்டுகள் ஒருமித்த உள்ளங்களோடு சைவ சமய வளர்ச்சி, கலை, கல்வி, தேகப்பயிற்சி, கிராம முன்னேற்றம், தொண்டு ஆகிய உயர்ந்த, சிறந்த, பரந்த நோக்கங்களை தமது இலட்சியமாகக் கொண்டு தம்வாழ்க்கையை இளைஞர்கள் வளம் பெறச் செய்திருப்பதைக் கண்டு மட்டிலா மகிழ்ச்சி அடைகின்றோம்,

'எல்லா உன்னதக் கலையும் இறைவனின் படைப்பில் மனிதன் பெறும் இன்பத்தின் வெளிப்பாடு. அது அவனது அன்று' என்று ஆங்கிலப் பேரறிஞன் றஸ்கின் அன்று கூறியதை இங்கு நினைவு கூருவோமாக.

"மேன்மை கொள் சைவ நீதி" விளங்குக உலகமெல்லாம்" என்ற இம் மன்றத்தின் தாரக மந்திரத்தின் வழிநின்று, இவர்களின் பணிதொடர வாழ்த்துகின்றோம். நன்றி.

"சித்தி விநாயகர் கருணை மகத்தானது"

ஒப்பம்
(க. செல்வராசா)
செயலாளர்
மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர்
தேவஸ்தான பரிபாலன சபை.

25-01-1994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துவோம் வாரீர்!

பொன் விழாக் காணும் உயர்
மூளாய் இந்து இளைஞர் மன்றம் வாழியவே!

பண்ணோடு பரதமும் பாரில் தளைக்கவும்
கண்ணோடு கடவுள் எம்கருத்தில் இருக்கவும்
விண்ணோடு இறையருள் மண்ணில் நிலைக்கவும்
தன்னோடு உமைதந்தான் தரும்சைவம் வாழியவே!

சமயம் தளைக்கவோர் சங்கம் பிறந்தது
சைவ இளைஞர் சங்கமாய் வளர்ந்தது
எங்கும் சிவமென எழுந்து நடந்தது
இன்று இந்துஇளைஞர் மன்றமாயாய் மலர்ந்தது!

பொங்கும் புகழொடு சைவம் பரவிட
போற்றியே எங்கும் புகழோடு காத்திட
சங்கம் வளர்த்த தமிழோடு மூளாய்
எங்கும் இந்துஇளைஞர் மன்றம் செறிந்தது!

உள்ளூர் மக்களை உயர் சைவமாக்கி
வெளியூர் எங்குமே வேதங்கள் பரப்பி
விழியெனக் காக்கும் வழியினில் மன்றம்
பொன்விழாக் கண்டது போற்றுவோம் வாரீர்

வாழிய மூளாய் இந்துஇளைஞர் மன்றம்
வாழிய அறிவும் ஆற்றலும் வளர்ந்து
வெல்லும் தமிழும் சைவமும் தளைக்க
வேள்கள் தோறுமுயர் வெற்றியும் பெற்றே!

*வாழ்த்துரை வழங்குபவர்: கவிஞர்*
திரு. செ. சிவசுப்பிரமணியம் மூளாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க! வளர்க!! இந்து இளைஞர் மன்றம், மூளாய்.

1943ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மூளாய் இந்து இளைஞர் மன்றம் காலத்திற்குக் காலம் தியாக உணர்வு படைத்த அன்பர்களின் அயரா முயற்சியினால் வளர்ந்து, எமது சமூக, சமய, கலாச்சார அமைப்பிற் பல புரட்சிகரமான சீர்திருத்தங்களை வெற்றிகரமாகச் சாதிக்கும் அளவிற்கு வளர்ச்சியடைந்து பொன் விழா மலரொன்றை முகிழ்க்கும் நிலை கண்டு இம்மன்றத்தின் ஆரம்ப கால அங்கத்தவன் என்ற ரீதியில் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன். இம் மன்ற வரலாற்றில், விசேடமாகக் சென்ற பத்தாண்டு காலத்தில் இக்கிராம இளைஞர்களின் சமூக சீர்திருத்தத்திற்குரிய முற்போக்கான கருத்துக்கள் இம் மன்றத்தின் மூலம் இக் கிராமத்திற் பிரதிபலிப்பதை தமியேன் நன்கறிவேன். எமது கிராமத்தில் அண்மைக் காலத்தில் ஏற்பட்ட பல சமூக, சமய சீர்திருத்தங்கள் இம்மன்றத்தின் அயரா முயிற்சியின் விளைவுகள் என்பது யாவரும் அறிந்த உண்மையாகும். சீரற்ற சமூக நிலைகளினால் இம்மன்றம் நலிவுற்ற காலகட்டங்களில் இறை அருளினாலும், தன்னலமற்ற கற்றுணர்ந்த பெரியோர்களின் சீரிய வழி நடத்தலினாலும் இம் மன்றம் ஊக்கமும், உத்வேகமும் பெற்று மிளிர்ந்தமை இதன் வரலாறு பேசும் உண்மை. தியாகிகளின் முயற்சியிற்கால் கொண்டு. பெரியோரது அரவணைப்பில் வளர்ந்து, துடிப்புடைய இளைஞர்களின் செயற்பாடுகளினால் தளைத்துப் பொன் விழா மலர் பூக்கும் இம்மன்ற மணிவிளக்கு என்றும் ஒளிவிளக்காக மிளிரத் தமியேனது இதய பூர்வமான ஆசிகள் பல்லாயிரம்.

உத்வேகமும், ஆர்வமும் மிக்க இம்மன்ற இளைஞர்கள் பழையன கழித்துப் புதியன புகுத்தும் தமது நற்பணிகளினால் ஏற்படும் சாதனைகள் வரலாற்றில் அழிக்கப்படாத அழுத்தம் பெறுதற்கு நிதானம் தீர்க்க தரிசனம் அன்புடைமை, நேர்மை போன்ற தெய்வீகப் பண்புகளைப் பெருமளவிற் பேணுதல் வேண்டுமெனத் தமியேனது சிற்றறிவிற்கும் குறுகிய அனுபவத்திற்கும் அமைய அறிவுறுத்தி. இம்மன்றம் வியத்தகுமுறையில் வைரவிழாக் காணும் அருளாசியைப் பாலித்தருளுமாறு ஆறுமுகன் அண்ணன் தும்பிக்கையானை நம்பிக்கையுடன் இறைஞ்சி அமைகின்றேன்.

அனைவருக்கும் அன்பும், பணிவும் மிக்க வணக்கங்கள்.

ஒப்பம்

மூளாய்,
சுளிபுரம்.
22-01-1994.

(நா. வேலுப்பிள்ளை)
இளைப்பாறிய அதிபர்
மூளாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்க ஸ்தாபகர்களில் ஒருவரும்
ஓய்வு பெற்ற அதிபருமாகிய

## திரு. வீ. கனகசபாபதி அவர்கள்

# வழங்கிய ஆசிச் செய்தி

எமது இளைஞர் மன்றம் இன்று மறுமலர்ச்சிபெற்று உத்வேகமாக வளர்வது கண்டு பெரும் ஆனந்தம் அடைபவர்களில் நானும் ஒருவன் என்பதில் பெருமன நிறைவு பெறுகின்றேன். அன்று நான்கண்ட கனவு நனவாகிவிட்டதே என்பதை நினைந்து புளகாங்கிதம் அடைகின்றேன்.

சமயம், கல்வி, சமூகம் என்பன இளைஞர்களுடன் ஒன்றிணைய வேண்டும் என்பதுதான் எமது உள்ளார்ந்த நோக்கமாக அமைந்து ஆரம்பிக்கப் பட்டதே இச்சங்கம் ஆகும். அதனை வழுவாது நிலைநாட்டிக் கொண்டு வருவது கண்டு மனம் பூரிப்படைகிறேன். வளர்ந்துவரும் இம்மன்றத்திற்கு எனது இதயபூர்வமான பாராட்டுக்கள்.

"அம்பிகாபதி"
சுன்னாகம் தெற்கு, வீ. கனகசபாபதி
சுன்னாகம்.
22-01-94

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூளாய், இந்து இளைஞர் (சங்கம்) மன்றம் இன்று ஓர் பெரு விருட்சஷம்.

மூளாய் வாழ் இந்துப் பெரியார்களின் இதயங்களில் இன்றைக்கு ஐம்பது ஆண்டு காலத்திற்கு முன்பாக அவர்கள் சிந்தனையில் மொட்டாக தோன்றிய வினைவே அன்று மூளாய்க் கிராமத்தில் ஓர் இந்து இளைஞர் மன்றம் அமைக்க வேண்டுமென்ற வித்தாகும்,

ஆயினும், அந் நேரத்தில் அவர்களது உளசெயற்பாடுகளை விட யதார்த்த பூர்வமான நடைமுறை செயற்பாடுகள் யாவும் மெதுவான வேகத்தில் நகர ஆரம்பித்தன எனலாம்.

சாலதேவன் மெல்ல நகரத் தொடங்கியபோது எல்லாம் வல்ல விக்கினேஸ்வரப் பெருமானின் பெரும் கருணையினால் இந்த மன்றத்தின் சிறந்த நிர்வாக கட்டமைப்பு 1984ம் ஆண்டளவில் முதல் முறையாக உருவானதை நாம் என்றும் மறக்க முடியாது. இந்தகால கட்டத்தில் அப்போதைய நிர்வாகம் யதார்த்த பூர்வமான ஒரு திரட்டிய செயலொழுக்கத்தில் தம்மை சேவைக்காக அர்ப்பணித்து முற்று முழுமையாக செயலாக்கத்தில் இறங்கி ஆற்றிய பணியின் விளைவே இவ்று நாம் காணும் இம் மாமன்றமாகும்.

அன்றைய காலகட்டத்தில் இன்றைய மன்ற பரிணாமத்திற்காக எம்முடன் சேர்ந்து துணிவுடன் ஓடி முயன்று சேவையாற்றிய முன்னோடி நிர்வாக அங்கத்தவர்கள் எமது மதிப்புக்குரிய செல்வங்கள் திரு. க. தளையரத்தினம், திரு. த. பத்மநாதன் திரு த. அழகராசா, திரு. ஐ. அகிலேஸ்வரன், திரு: ம. குணபாலன், திரு. வே. ராஜ்குமார், திரு. சு. பாலகிருஷ்ணன், திரு. கு. சிவசுப்பிரமணியம், திரு. து. நிமலன், திரு. சு. புகழ்ரான் ஆகிய நிர்வாகிகளுக்கு நாம் அனைவரும் என்றும் நன்றி கூற கடப்பாடுடையோம்.

மேலும் திரு. ம. சிவசுப்பிரமணியம், திரு. அ. கனகசபை(அப்பர்) திரு. கி. சிவநாயகம் போன்ற நல்லோர் அன்று எம்முடன் தோளோடு தோள் நின்று எமக்கு நல்ல ஆலோசனைகளையும் பல வகை உதவிகளையும் தந்துதவிய சந்தர்ப்பங்களை எல்லாம் இம்மன்ற பொன்விழா காணுகின்ற வேளையில் நினைத்து பேருவகை அடைகிறேன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக இம்மாமன்றத்தின் பரிணாம வளர்ச்சிப் பாதையில் தொடர்ச்சியாக இன்றுவரை காலத்திற்கு காலம் தம்மை முழுமையாக அர்ப்பணித்து வந்துள்ளன. இம்மன்ற வரலாற்று நிர்வாகிகள் பலரையும் இம்மன்றம் பொன்விழா காணுகின்ற வேளையில் மனமார போற்றுகிறேன்.

அன்றுமுதல் இன்றுவரை பங்கேற்றுள்ள பொறுப்பு மிக்க நிர்வாக திறமையினாலும் சமய பெரியோர்களின் நல்லாசிகளினாலும் இந்துப் பெருமக்களின் பேராதரவினாலும் எத்தனை இடர் ஏற்படினும் தளராது துணிந்து முன்னோக்கி செல்லும் மன்ற வாலிப தோழர்களாலும் இது காலவரை மன்றம் பெற்று வந்த தலைமையின் பொறுப்பு மிக்கதும் நடுநிலை கொள்கை சிறப்பு வழியாக இன்று இம் மன்றம் வனப்பு மிக்க மகோன்னத நிலை தாங்கி மிழிர்வது கண்டு பொன்விழா காணும் இவ்வேளை நான் உள்ளம் பூரிப்படைகிறேன்.

இவ்வாறாக தொடர்ந்து இம் மன்றம் விழுதுகள் பல நூறு தாங்கிய ஆலவிருட்ஷம் போல நிலைத்து வளம்பெற இம்மன்றத்தின் ஐம்பது ஆண்டு பொன்விழா படிக்கட்டில் எனது வாழ்த்துரைகளையும் நல்லாசிகளையும் சமர்ப்பணமாக்கி மகிழ்ச்சியடைகிறேன்.

நன்றி

குரு. க. பாலச்சந்திரன்
முன்னாள் நிர்வாகியும்
இன்றைய போசகரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஆசியுரை

எமது கிராமத்தில் பல இளைஞர்களும் சங்கங்களும் தோன்றின வரலாறுகள் இல்லாமலே மறைந்து விட்டன. ஆனால், எங்களால் 1943 ஆண்டு மார்கழி மாதம் 22ம் திகதி ஸ்தாபிக்கப்பட்ட மூளாய் சைவ இளைஞர் சங்கம் இன்று தனி வரலாற்றுடன் இந்து இளைஞர் மன்றம் என்ற பெயருடன் வெகு விமரிசையாக பொன்விழா கொண்டாடுவதைக் கண்டு புளகாங்கிதம் அடைகின்றேன்.

அமரர் பொன்னம்பலம், கனகசபாபதி B Sc EC. A அவர்கள் கலங்கரை விளக்குப்போல் சுயநலமற்று பொதுநலத்தைக் கருத்தில் கொண்டு மக்கள் பணியே மகேஸ்வரன் பணியென" ஆரம்பத்தில் இருந்து மன்றத்தை வழி நடத்தி. எல்லாத் திங்களையும் செயல்படுத்தினார் என்பதை எனது இதய சுத்தியுடன் கூற விரும்புகின்றேன்.

1983ம் ஆண்டு சில மாதங்கள் மூளாயில் இருக்க நேர்ந்தது. அன்றைய சைவ இளைஞர்கள் சங்கத்திற்குப் புத்துயிர் ஊட்டி ஒரு நிரந்தரக் கட்டிடத்தை மிகக் குறுகிய காலத்தில் (27 நாட்களில்) பூர்த்தி செய்தமையைக் கண்டபோது பெருமகிழ்ச்சியடைந்தேன்.

இளைஞர்கள், சமயம், கல்வி, கிராம முன்னேற்றம் என்பவற்றில் விழிப்புணர்ச்சியுடன் செயல்படுகிறார்கள் என்பதைக் கண்டு மனப் பூரிப்படைகின்றேன்.

மூளாயம்பதியில் அருள்பாலித்திருக்கும் சித்தி விநாயகப் பெருமானின் பொற்பாதங்களை வந்தித்து, இம்மன்றத்தின் விரிவாக்கப் பணிகள் வெற்றி பெற வேண்டுமென்று உளமார வாழ்த்துகின்றேன்.

மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகமெலாம்.

வ. நவரெத்தினம்
சங்கநிறுவனர்களில் ஒருவரும்
இளைப்பாறிய கணக்காளர்
இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்.

மூளாய்,
சுழிபுரம்,
26-01-94.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூளாய் இந்து இளைஞர் மன்றத்திற்கு
தமிழீழ கலை பண்பாட்டுக்கழகம் வழங்கிய
ஆசியுரை

# இன்னும் பணியாற்ற என் வாழ்த்துக்கள்

மனுக்குலத்தை ஆற்றுப்படுத்தவும் சரியான திசைவழியில் ஒரு நெறியான சமூகமாக அதை ஒழுங்குபடுத்தவுமே மதங்கள் தோற்றம் கொண்டன, கட்டுப்பாடற்று யாரும் தட்டிக் கேட்க முடியாதவாறு ஒரு சமூகம் நிலையிழந்து போகக்கூடாது என்பதை நிறுத்தி, அழகான, ஆற்றொழுக்கான வரையறைக்குட்பட்ட ஒரு சமூகத்தை உருவாக்க வேண்டுமென்ற எண்ணத்தில்தான் இந்து சமயம் தோற்றங் கொண்டது. வெறும் காவிக்கும் கமண்டலத்துக்குமான தத்துவங்களல்ல இந்துசமயத் தத்துவங்கள். அது மக்களின் விட்டு விடுதலையான சுதந்திரத்துக்கானது. என்பதை அதற்குள் ஆழ்ந்து போபவர்கள் அறியமுடியும். இந்த வகையில் சமூகத்துக்குப் பணிசெய்ய வேண்டும்; நல்லன இந்த நாட்டில் நடைபெறவேண்டும்; எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும். தாங்களும் தங்களைச் சார்ந்த அயல் கிராம மக்களும் இன்னும் சொல்லப்போனால் தமிழீழமும் வாழ வேண்டுமென்பதில் பெரு அவாக்கொண்டு மூளாய் இந்து இளைஞர் சங்கம் பணியாற்றி வருவதை நான் நீண்ட நெடு நாட்களாக அறிவேன். இந்த இந்து இளைஞர்களின் நல்லன விரும்பும் மனதையும் பாரிய பணிகளைக்கூட ஏற்று நிறைவேற்றும் பாங்கையும் பார்த்துப் பரவசப்பட்டவர்களில் நானும் ஒருவன். இவர்கள் ஆற்றும் சமூகப் பணிகள் அளவற்றன. வெறும் விபூதிதாரிகளாக மட்டுமல்லாமல், இந்து மதத்தின் உண்மையைப் புரிந்துகொண்ட இளைஞர்களாக இருப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். சேதுபந்தன உருவாக்கத்துக்கு சிறு அணில் செய்த பங்களிப்புப் போல இவர்களும் தங்களால் இயன்ற அளவுக்கு இந்த மண்ணுக்குப் பணியாற்றுகின்றனர். இவர்களது பணி சிறக்கவும், பொன்விழா காணும் இந்து இளைஞர் சங்கம் மென்மேலும் வளர்ந்து சமூகத்துக்கும், தமிழ் மக்களுக்கும், இந்து மதத்துக்கும், வெல்லப்போகும் எங்கள் விடுதலைப் போராட்டத்துக்கும் சேவையாற்ற வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

புதுவை இரத்தினதுரை
பொறுப்பாளர்
விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம்
நடுவப் பணியகம்
தமிழீழம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையினர் மன்றத்திற்கு அளித்த ஆசிச் செய்தி

**"வீரம் செறிந்த மக்கள் தம் விளைநிலத்தில் உதித்த இந்து இளைஞர் மன்றம்"**

இந்து தர்மமும், தமிழும் அரியாசனத்தில் வைத்து செங்கோல் ஓச்சப்பெற்ற யாழ்ப்பாண இராஜதானி போர்த்துக்கேயர், டச்சுக் காரர் போன்ற ஐரோப்பியரால் ஆக்கிரமிக்கப்பட்டு இந்துதர்மமும், தமிழும் திட்டமிட்டு அழிக்கப்பட்ட காலத்தில், ஏழு வீதிகளையுடைய சிறப்புப்பெற்ற பொன்னாலை அருள்மிகு வரதராஜப்பெருமாள் ஆலயம் உட்பட, இந்து ஆலயங்கள் இடிக்கப்பெற்று டச்சுக்காரரால் கோட்டை கட்டப்பட்ட வரலாற்றுப் பேரழிவை இந்து தர்மம் எதிர் நோக்கிய காலத்தில் இந்து தர்மத்தையும், தமிழையும் வளம் தவறாது உறுதி தளராது பேணிப் பாதுகாத்த வீரம் செறிந்த மக்களது விளை நிலத்தில் வழிவந்து யாழ்ப்பாண தீவகற்பத்தின் மேற்குக் கரை யோரத்தில் இந்து தர்மத்தையும், தமிழையும் பேணி வளர்த் தும் பணியை ஆற்றிவரும் மூளாய் இந்து இளைஞர் மன்றம் தனது தர்மப் பணியில் பொன்விழாக் காணுவது நம் அனைவருக்கும் பெருமை யூட்டுவதாக அமைகின்றது.

நானூற்றிஐம்பது வருடகால ஐரோப்பியர் ஆட்சிக்காலத்தில் ஆலயங்கள் இடிக்கப்பட்டபோதும் பெருமளவு மதமாற்றத்தால் அழி வுறாத நம் இந்து தர்மம், இன்று மதமாற்றத்தாலும் யுத்த அனர்த் தத்தாலும் சிவபூமியாகிய ஈழமண்ணில் வரலாற்று ரீதியாக பேரழி வினை எதிர்நோக்கி நிற்கின்றது.

இத் தருணத்தில் திட்டமிட்டு துயரங்களுக்கு ஆளாக்கப்பட்டு, வீடு வாயில்கள், சொத்துக்கள், சுகங்களை இழந்து பட்டினியாலும் பசியாலும் இன்னலுறுகின்ற தம் மக்களது துயரங்களையும் கண் ணீரையும் துடைத்து அவர்களது இடர்களைக் களையும் வகையில் தர்மசேவை நிலையங்களையும், தர்மசேவை செயல் திட்டங்களையும் இவ்வூர் கொடைவள்ளல்கள், வெளிநாட்டிலுள்ள அன்பர்கள், ஆல யங்கள் ஆகியவற்றின் துணைகொண்டு பொருளாதார வசதிக்கேற்ப அவற்றினை செயல்படுத்தி நம் மக்களையும் இந்து தர்மத்தையும் பாதுகாக்க பொன்விழாச் சிறப்பாக விரிவான செயல் முறைகளை இப் பகுதியில் வகுக்க எல்லாம் வல்ல இறைவன் திருவருளை இத் தருணத்தில் வேண்டிப் பிரார்த்திப்போமாக.

சுபம்.

ஒப்பம்

(ப. சிவலோகநாதன்)
கௌரவ பொதுச் செயலாளர்,
இந்து இளைஞர் பேரவை,
யாழ். மாவட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்ற ஆரம்பகால உறுப்பினர்கள் (22-12-1943)

திரு. பொ. கனககசபாபதி — தலைவர்
திரு. வீ. கனகசபாபதி — காரியதரிசி
திரு. வ. கந்தசாமி — உப-தலைவர்
திரு. அ. நாகலிங்கம் — உப-காரியதரிசி
திரு. வ. நவரத்தினம் — தனாதிகாரி

## நிர்வாக சபை அங்கத்தவர்கள்

திரு. வே. சிவபாதசுந்தரம், திரு. வீ. பொன்னம்பலம் திரு பொ. நடனசபாபதி, திரு. அ. முத்துக்குமாரு, திரு. கோ. அரியரத்தினம், திரு. மு. பாலலிங்கம், திரு. செ. சந்திரசேகரம், திரு. கோ. இரத்தினசபாபதி, திரு. செ. சிவராசா, திரு. பொ. பாலரத்தினம், திரு. சீ. அருமைநாயகம், திரு. நா. சட்டநாதன்.
திரு. ம. கனகசபாவதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்ற ஸ்தாபகர்



அமரர் திரு. பொ. கனகசபாபதி (B. Sc, F. C. A)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்ற குறிப்பேடுகளிலிருந்து நிர்வாக நினைவலைகள்......

ஈழத் திருநாட்டில் சைவமும், தமிழும், கல்வியும், கலாச்சாரமும், வீரமும், பண்பும் சிறந்து விளங்கும் யாழ்ப்பாணத்திலே, அண்ணன் ஆனைமுகனும், தம்பி ஆறுமுகனும் ஒருங்கே வீற்றிருந்து அருள் புரிகின்ற வளமிகு மூளாயம்பதியிலே பொலிவுடன் "மூளாய் இந்து இளைஞர் மன்றம்" பொன்விழா ஆண்டைப் பூர்த்தி செய்ததில் பெரு மகிழ்ச்சியடைகின்றோம்.

இம்மன்றத்தின் கடந்த ஐம்பதாண்டு வரலாற்றின் பக்கங்களை நினைவலைகளாக உங்களுடன் பகிர்ந்து கொள்வதன் மூலம், உங்களையும் எம்முடன் இளமைப் பருவத்திற்கு இட்டுச்செல்லுவதன் மூலம் எமது மகிழ்ச்சியை இரட்டிப்பாக்குகின்றோம்.

## மன்றத்தின் வளர்ச்சி

சைவசமய வளர்ச்சி, கலைவளர்ச்சி, தேகப்பயிற்சி, கிராமமுன்னேற்றம் ஆகியவற்றை அடிப்படை நோக்கங்களாகக் கொண்டு 22-12-1945இல் "மூளாய் சைவ இளைஞர் சங்கம்" என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கம் பல அரும்பணிகளை ஆற்றிவரும் வேளையில் அகில இலங்கை இளைஞர் பேரவையின் ஒருங்கிணைப்புத் திட்டத்திற்கமைய, "மூளாய் இந்து இளைஞர் மன்றம்" எனப்பெயர் மாற்ற 1974-ம் ஆண்டு முயற்சிகள் எடுக்கப்பட்ட போதிலும், உத்தியோக பூர்வமாக 21-01-84இல் இருந்தே இந்து இளைஞர் மன்றமாக பெயரை மாற்றிக்கொண்டது. இம் மன்றத்தின் வளர்ச்சியில் பெரிதும் கவரப்பட "மூளாய் உதயசூரியன் சிறுவர் நூலகம்", "மூளாய் உதயசூரியன் விளையாட்டுக்கழகம்" ஆகிய இரண்டும் 1984 இல் மன்றத்துடன் இணைந்து கொண்டது. 1978-ம் ஆண்டு முதல் சமய வகுப்புகள் நடாத்தல், சமயப்பற்றை வளர்த்தல், சமயப் பரீட்சைகள் நடத்தல் போன்ற சமய நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்த "மூளாய் இந்து சமய மன்றம்" இந்து இளைஞர்களின் ஐக்கியத்தை வளர்க்கும் முகமாக 1984-ம் ஆண்டு, இதனுடன் இணைத்துக்கொண்டது.

## நிறுவனப் பதிவு

இம் மன்றம் பிரதேச அபிவிருத்தி, இந்து சமய கலாச்சார தமிழ் அலுவலகங்கள் அமைச்சின். இந்து சமய கலாச்சார அலுவலகங்கள் திணைக்கள நிறுவனப் பதிவாக 03-12-1988 இல் HA/40/44 எனப் பதியப்பட்டு அதன் செயற்பாடுகளை செவ்வனே நிறைவேற்றி வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ❀ சைவ சமய வளர்ச்சி

சைவ சமயத்தை வளர்க்கும் நோக்குடன் இச் சங்கம் சமயத்திரு நாட்களாகிய சிவராத்திரி, நவராத்திரி, போன்ற விழாக்களை விமரிசையாக நடாத்தியும், சமய சொற்பொழிவுகளை ஒழுங்கு செய்தும்' சிறுவர்கட்கு சமய வகுப்புகளை நடாத்தியும், சைவசமயப் பாடபரீட்சைகளை ஆண்டுதோறும் வைத்து பரிசில்களை வழங்கியும், பண்ணிசைப் போட்டிகள், பேச்சுப் போட்டிகள் மனனப் போட்டிகளை போன்றபோட்டிகளை நடாத்திப் பரிசில்களை வழங்கியும் வந்துள்ளன.

அத்துடன் பன்நெடுங்காலமாக இக்கிராமத்தில் இரு கண்களாக விளங்கும் ஆனைமுகனுக்கும், ஆறுமுகனுக்கும் வெள்ளிக்கிழமை தோறும் நடைபெறும் பஜனைக்கும் அன்றுமுதல் இன்றுவரை சிறப்புற நிறைவேற வழிவகுத்து வருவது சிறப்பம்சமாகும். மேலும் இளைஞர் கடைப்பிடிக்க வேண்டிய சமய ஆசாரங்களையும், சமய பழக்க வழக்கங்களையும், சமய அடிப்படை தத்துவங்களையும், சமய அறிவினையும் போதித்தல் எமது சமய பாரம்பரிய சிறப்புகளை உணரச் செய்து பக்தி உணர்வினை வளர்த்தல், நேர்மை, தியாகம் கடமையுணர்ச்சி, பரோபகாரம் ஆகிய நற்குணங்களையும், நல்லொழுக்கங்களையும் போதித்து உணரச் செய்தல் என்பவற்றிலும் ஈடுபட்டு வருகிறது.

## கலை வளர்ச்சி

கலை வளர்ச்சிக்கு எமது சங்கம் கடந்த 50 ஆண்டுகளாக, பல அளப்பரிய சேவைகளை செய்து வந்துள்ளது. முத்தமிழாகிய இயல், இசைநாடகம் போன்ற நிகழ்வுகளைவருடாவருடம் நடாத்தி அவை வளரவும், எமது ஊர் மக்கள் கண்டும், கேட்டும், உணரவும் இளைஞர்கள், யுவதிகள் அதில் பங்களிப்பு செய்வதுடன் தம் கலை இலட்சியங்களை மேன்மையுறச் செய்யவும் வழிவகுத்து வருகிறது. மேலும் அறிவுப் போட்டிகளையும், சிறுகதை, கட்டுரைப் போட்டிகளையும் நடாத்தியும், பட்டிமன்றம், கவியரங்குகள் நடாத்தியும், சங்கீதம், நடனம், சித்திரம், அபிநயம் போன்ற நுண் அழகியற் கலைகள் வளர வழிகோலியும் ''சைவமும் நாமும்'', ''சைவமும் மூளாயும்'', மகா சிவராத்திரி மகிமை'' போன்ற' பேச்சுப் போட்டிகளையும், கல்வியா? செல்வமா? சிறந்தது'' போன்ற பட்டி மன்றங்களையும், பல இன்னிசை மாலை நிகழ்வுகளையும், ''மந்திரி குமாரி'', பாத்திபன் கனவு'' போன்ற சரித்திர நாடகங்களையும், ''யாகசங்காரம்'' போன்ற புராண நாடகங்களையும், ''புரோக்கர் பொன்னையா'', ''பணம் பத்தும் செய்யும்'' போன்ற நகைச் சுவை நாடகங்களையும், மேலும் பல சமூக நாடகங்களையும், பல வில்லிசை நிகழ்வுகளையும் நடாத்தியது குறிப்பிடத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் முத்தமிழும் இணைந்த கலைவிழாக்கள் நடாத்தப்பட்டதும், கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டதும் சிறப்பம்சமாகும். எமது கிராம மக்களின் ஆக்கங்களை, ''இளந்தீபம்'' எனும் கையெழுத்து சஞ்சிகை மூலம் 06-09-1984 முதல் கடந்த பத்து ஆண்டுகளாக பலத்த சிரமங்களின் மத்தியிலும் வெளியிட்டு வருவது எழுத்துத் துறைக்கு இளைஞர் அளித்து வரும் பெரும் வரப்பிரசாதமாகும்.

## தேகப்பயிற்சி-விளையாட்டுத்துறை

இளைஞர்களிடையே தேகப்பயிற்சியை ஊக்குவிப்பதன் மூலம் வருங்காலச் சந்ததியினர் உடல் நலத்துடன் உளநலமும் பெற்றுவாழவும், ஒய்வு நேரத்தை உடலுக்கு ஏற்ற நல்வழிகளில் பயன் படுத்தவும் ஏதுவாக அமைந்துள்ளது. மெய்வல்லுனர் நிகழ்ச்சிகள் ஆண்டுதோறும் நடாத்தப்பட்டு வந்ததுடன் கிறிக்கெற், கரப்பந்து, உதைபந்துபோன்ற மேற்கத்திய விளையாட்டுக்களுடன். தாச்சி, எல்லே போன்ற சுதேசவிளையாட்டுகளும் 1943 இல் இருந்து இற்றவரை நடைபெற்று வருகிறது. 1953ம் ஆண்டு வலிமேற்குப் பிரிவில் கரப்பந்து சுற்றுப் போட்டியில் முதலிடம் பெற்று வெற்றிக் கிண்ணத்தை இச் சங்கம் பெற்றுக் கொண்டது குறிப்பிடத்தக்கது, மேலும் தாச்சிப் போட்டிகளிலும், கிறிக்கற் போட்டிகளிலும் மன்றம் பல வெற்றிகளைப் பெற்றுள்ளது.

மன்றத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டியில், அங்கத்தவர் மட்டுமில்லாமல் இக் கிராமமக்கள் யாவரும் கலந்து கொள்ள அனுமதிப்பதன் மூலம் இளைஞர், யுவதிகளிடையே பரந்த அளவில் தகுதிகளை நிர்ணயிக்கவும் அவர்கள் தங்களது திறமையை வெளிப்படுத்தவும் சந்தர்ப்பம் அளிக்கப்படுவது ஓர் அரிய சிறப்பம்சமாகும். அத்துடன் மன்றம் பல சுற்றுப் போட்டிகளை நடாத்தியும் வந்துள்ளது.

## ❋ கிராம முன்னேற்றம்

இக் கிராம மக்கள் மேம்பாட்டிற்காக இச் சங்கம் இயந்திரசாதனதொழில் பாடசாலை பயிற்சிகளையும் கைமூலமும் இயந்திரமூலமும்பெறவும் பாடுபட்டு வந்துள்ளது.1984ம் ஆண்டிலிருந்து மரம் நாட்டு விழாக்கள் நடாத்தியும், உணவுத் தட்டுப்பாடு நடவடிக்கைக்கு எதிராக விவசாயத்தில் கிராமமக்களை ஊக்கப்படுத்தியும், இக்கிராம மக்களின் தண்ணீர்ப் பிரச்சனைகளில் சர்ச்சை ஏற்பட்டபோது சமரச நடவடிக்கையில் ஈடுபட்டு சரிசெய்தும், இக்கிராம நெசவு நிலையம் இடிந்து வீழ்ந்தபோது சரிசெய்ய நடவடிக்கை எடுத்தும், இக்கிராமத்தில் சுகாதார குறைபாடுகளும், தொற்று நோய்களும் வந்த காலங்களில் அவற்றை கட்டுப்படுத்த சுகாதார வெளிக்கள உத்தியோகத்

தர்களுக்கு உதவி செய்து தொண்டர்களாக கடமையாற்றியும், சுகாதார அபிவிருத்தி சபைகளுக்கு கருத்தரங்குகள் நடாத்த உதவிகள் செய்தும், மூளாயில் சாமாதான சபைகள் இயங்கியபொழுது அந் நடவடிக்கைகளில் பங்கு கொண்டும், வசதி குறைந்த மாணவரின் கல்வித் தரத்தை உயர்த்த இலவச வகுப்புகளை நடாத்தியும், கிராம யுவதிகளின் மேம்பாட்டிற்காக "மூளாய் மாதர் சங்கம்" அமைக்க உறுதுணையாக இருந்தும், வன்செயலினால் கணவன்மார் இறந்த கைம்பெண்கள் நிவாரண உதவிகளைப் பெற பாடுபட்டும், கிராமத்தில் மாடுகளுக்கு "கோமாரி நோய்" பரவியபொழுதும், கோழிகளுக்கு நோய்கள் ஏற்பட்ட போதும் நோய்த் தடுப்பு ஊசிகளை ஏற்றுவதற்கு கால்நடை வைத்தியர் மூலம் உதவியும், அரச படையினரின் செயற்பாடுகள் காரணமாய் இடம் பெயர்ந்தவர்கட்கு, இடம் பெயர்ந்தோர் முகாம்களை நடாத்தியும், மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை பாதிக்கப்பட்ட சமயம் உதவியும், கட்டாக்காலிகளை கட்டுப்படுத்த கிராம முன்னேற்றச் சங்கங்களுக்கு உதவியும் வந்துள்ளது. விசேடமாக சமகால போராட்ட நிகழ்வுகளில் தம்மாலான உதவிகளை செய்து வருவதும், சிரமதானம் மூலம் விக்னேஷ்வரா வீதி புதிதாக உருவாக்க உறுதுணையாகவும், பித்தனை சுடலை வீதி திருத்த உதவியும், பொதுமக்கள் பாதுகாப்பிற்காக பொது இடங்களில் பதுங்கு குழிகள் அமைக்க உதவியும், போர்க்காலச் சூழ்நிலையில் காயமடைவோருக்கு உதவியும் வருவது சமகால நிகழ்வாகும்.

## ஆலயத்தொண்டு

இந்து இளைஞர் மன்ற அங்கத்தவர்கள், மன்றத்தின் மேற்குறிப்பிட்ட வளர்ச்சி விடயங்களில் ஈடுபட்ட போதும், அவர்களின் எண்ணங்கள் ஆலயத் தொண்டிலே இணைந்திருந்தது. உள்ளங்கள் இறைவனிடம் ஒன்றியிருந்தது. "அறற்கன்பு செய்வதே நரர்கட்கு முறையாவது" திருப்பணிகள் செய்வதே பெரும் புண்ணியம் என்ற மகாகவி பாரதியின் வாக்கிற்கமைய மன்ற அங்கத்தவர்கள் முன்பு திருக்கேதீச்சரம், பின்னர் நல்லூர் கந்தன், பொன்னாலை வரதராஜப்பெருமாள், மருதடி விநாயகர், நகுலேஸ்வரம் முதலிய வெளியூர் ஆலயங்களிலும் விசேடமாக வதிரன் புலோ சித்திவிநாயகர், ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி ஆலயங்களிலும் மகோற்சவ காலங்களிலும், சங்காபிஷேக வைபவங்களிலும் தொண்டு செய்து வந்துள்ளனர்; வதிரன் புலோ ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்துடன் மன்றம் ஐக்கியமாகியிருக்கிறது என்று கூறினால் மிகையாகாது பரிபாலன சபை உருவாகும் வரை, ஆண்டு தோறும் ஆலய மகோற்சவ காலத்திற்கு முன் பூச்சுவேலைப் பணியை முழுமையாக நிறைவேற்றி வந்துள்ளது இவ்வாலய மேற்குப்புறச் சுவர் விழும் நிலையிலிருந்தபோது, பொதுமக்களின் ஒத்துழைப்புடன் புதிய சுவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்றத்தால் அமைக்கப்பட்டது. மேலும் அடியார்கள் விருப்பத்தின் பேரில் 02-11-1991இல் இவ்வாலயத்திற்கு ஓர் பொதுப் பரிபாலன சபை வேண்டும் என்ற அளப்பரிய செயல் திட்டத்திற்கு இளைஞர் கள் முன்னின்று உழைத்து அத்திட்டம் பூரணப்படுத்தப் பட்டுள்ளது மேலும் 13 ஆண்டுகள் முடிவுற்றும் ஸ்ரீ சித்திவிநாயகர் – ஸ்ரீ முத்துக் குமாரசுவாமி ஆலய புதிய சித்திரத்தேர் முழுவதும் பூர்த்தியடைய முடியாத நிலையில் இம்மன்ற அங்கத்தவர்களின் பிரயாசையினால் 24-06-1991 சித்திரத்தேர் முழுமை பெறப்பட்டு வெள்ளோட்ட விழா நடைபெற்றதும் வரலாற்று உண்மை. ஆலயப்பணிகளை பொறுப் போடு செய்து வருவது மகத்தான சேவையாகும். ஆலயப்பணி களில் முழுமையாக ஈடுபட்ட மன்ற அங்கத்தவர்கள் பலரும் இன்று நல்ல நிலையிலிருப்பது இறைவன் அருளேயாகும்.

நூல்நிலையம்:

''வாசிப்பதனால் மனிதன் பூரணத்துவம் அடைகிறான்'' என்ற கருத்திற்கமைய, இக் கிராம மக்களின் பூரணத்துவத்துக்கு அடிப் படையாக, 1983இல் மன்ற நிர்வாகம் எடுத்த பெருமுயற்சியினால், மன்றத்துக்கென ஓர் நூல்நிலயத்தை நிரந்தர கட்டடமாக, மூளாய் சித்திவிநாயகர் ஆலய வளவில், முன்றலில் 27 நாட்களில் உருவாக்கி 21-01-1984இல் ''துர்க்கா துரந்தரி'' செல்வி தங்கம்மா அப்பாக் குட்டி அவர்களினால் திறந்து வைக்கப்பட்டு இன்றும் தன்னிகரில்லாச் சேவையை செய்து வருவது யாரும் நினைவு கூரத்தக்க செயல் பாடாகும்.

நிறைவுரை:

இளம் உள்ளங்களில் இறைநம்பிக்கையையும், தூய்மையான கருத் துக்களையும் விதைக்கவேண்டும். ''உள்ளத்தனைய உயர்வு'' என்பது வள்ளுவன் வாக்கு. இதற்காக இறைவன் பால் உயர்ந்து நின்று ''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்'' என்ற மன்ற தாரக மந்திரத்தைக் கடைப்பிடித்து பொன்விழா ஆண்டை நிறைவு செய்துள்ள எமக்கு, இதுவரை காலமும் ஆக்கமும், ஊக்கமும், ஆலோசனைகளும் அளித்து நிதி, பொருள் உதவிய அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவிக்கின் றோம்.

நன்றி

பா. சற்சொரூபன்
தலைவர்

செ. சுதர்ஷன்
செயலாளர்
இந்து இளைஞர் மன்றம்
மூளாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்றத்தின் புத்துயிர்ப்பு

1984ல் ஓர் நிரந்தர கட்டடத்தை அமைத்தும், இளைஞர்களின் ஐக்கியத்தை முன்னிறுத்தி பிற அமைப்புக்களை மன்றத்துடன் இணைத்தும், மன்றத்திற்கு புத்துயிர் ஊட்டிய நிர்வாகத்தை நாம் இப்பொன் விழா நேரத்தில் நன்றியுடன் நினைவுகூருவதும் எமது கடமையாகும்.

## 1984-ம் ஆண்டு நிர்வாகத்தினர்

தலைவர்:- த. அழகராசா
உப-தலைவர்:- சு. புகழ்ராஜன்
செயலாளர்:- வே. கருணாகரன்
உபசெயலாளர்: ந. குணபாலன்
பொருளாளர்:- ஐ. அகிலேஸ்வரன்
நூல்நிலையப் பொறுப்பாளர்கள்:- க. தளையரட்ணம்
நூல்நிலைய உப-பொறுப்பாளர்:- து. சண்முகராசா
விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர்:- து. நிமலன்
விளையாட்டுத்துறை உப-பொறுப்பாளர்:- ந. ரவிக்குமார்
பத்திராதிபர்:- வ அமரசிங்கம்
உத்தியோகப்பற்றற்ற நிர்வாகசபை உறுப்பினர்கள்:-
கி. சந்திரரூபன், இ. கருணாகரன்
சமயத்துறைப் பொறுப்பாளர்:- த. முகுந்தன்
கணக்குப் பரிசோதகர்கள்:- க. பாலச்சந்திரன்
ந. மதனராஜன்

## 1994-ம் ஆண்டுக்கான நிர்வாகசபையினர்

தலைவர்: பா. சற்சொருபன்
உப-தலைவர்: க. சுகுணவேள்
செயலாளர்: செ. சுதர்சன்
உப-செயலாளர்: சே. பராபரன்
பொருளாளர்: தி. ஜெயதாஸ்

மன்ற நூலகப் பொறுப்பாளர்: கி. சசிக்குமார்
உப-பொறுப்பாளர்: கோ. நந்தகுமார்
விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர்: வி. கனகசபாபதி
உப-பொறுப்பாளர்: நே லிங்கேஸ்வரன்
சமயத்துறைப் பொறுப்பாளர்: அ. ரங்கடம்பநாதன்
உப-பொறுய்பாளர்: தி. ஜனர்த்தனராஜன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைத்துறைப் பொறுப்பாளர்: சி. ராகவன்
உப-பொறுப்பாளர்; கி. சுரேஷ்
பத்திராதிபர்: இ. கோகுலன்
உப-பத்திராதிபர்: ச. கிருஷ்ணேந்திரன்

நிர்வாக உறுப்பினர்கள்: கா. பார்த்தீபன், ச. திலகரத்தினம், சி. வைகுந்தவாசன்
கணக்குப் பரிசோதகர்கள்: வை. ரவீந்திரன், நா. ஸ்ரீ கணேசன்
கௌரவ போதகர்கள்: திரு. ஆ. ஏகாம்பரநாதன்
திரு. க. பாலச்சந்திரன்
திரு. கி. சிவபாதசுந்தரம்.

## நன்றி நவிலல்.

இப் பொன்விழாச் சிறப்பு மலருக்கு ஆசியுரைகளையும், வாழ்த்துரைகளையும் அளித்துதவிய பெரியோர்களுக்கும், மிகவும் குறுகிய காலத்தில் மலரை அழகுற அச்சேற்றிய ஸ்ரீ காந்தா அச்சகத்தினருக்கும், இம் மலரிற்கு விளம்பரங்கள் தந்துதவிய மன்ற அபிமானிகளுக்கும், மேலும் இம்மலரை வெளிக்கொணர்வதில் ஆக்கமும், ஊக்கமும் உதவியும் அளித்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

நிர்வாகத்தினர்
இந்து இளைஞர் மன்றம்
மூளாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகலவிதமான மணிக்கூடுகள்
திருத்துவதில் பிரசித்திபெற்றவர்கள்

# வடிவேல் வாச் வேக்ஸ்

இல. 8, ஜுபிளிபஜார், யாழ்ப்பாணம்.

★

# தரன் ஸ்ரூடியோ

கலர், கறுப்பு, வெள்ளை படப்பிடிப்பாளரும்
றபர்சீல், டிசைன், புளொக் மற்றும்
ஓவிய வேலைகளுக்கும்

189, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

★

# New Puvaneswary Medical

69, Power House Road,

JAFFNA.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றெமிங்ரன் கல்வி நிலையம்

மூளாய். கிளை: சுழிபுரம்.

★ 20-வது சாதனை ஆண்டு ★

ஆண்டு 4 - O/L வரை வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

ஆசிரியர் குழு

| | |
|---|---|
| கணிதம்:- | ஸ்கந்தா, நடா, வளர்மதி |
| விஞ்ஞானம்:- | தேவதாஸ், நடா |
| தமிழ்:- | கணேஷ். மனோ |
| சமூகக்கல்வி:- | போதன, முருகானந் |
| ஆங்கிலம்:- | தேவதயாளன், சபா |
| வர்த்தகம் - | லோகேஸ் |
| சமயம்:- | மனோ |
| சுகாதாரம்:- | கலாராஜா |
| சித்திரம்:- | மணி |

K. மனோ
நிர்வாகி

---

## பிரகாஷ் ஆபரண மாளிகை

தங்கப்பவுண் நகை வியாபாரம்

## PIRAGAS JEWELLERY MART

83, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்

83, Kannathiddy Road, JAFFNA.

ஸ்ரீ காந்தா அச்சகம், அச்சக லேன், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org